# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க,

# அபிவிருத்திச் சபைகள் (திருத்தச்) சட்டம்

---

[1982, செத்தெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, செத்தெம்பர் மாதம் 17 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 65 தபாற் செலவு : சதம் 50

1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (திருத்தச்) சட்டம்

[1982, செத்தெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ 30/82
1529

1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும், 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தினல் உட்புகுத்தப்பட்ட) அதன் 17அ என்னும் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 17அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் :—

"(3அ) கிராமோதய சபை ஒவ்வொன்றும் இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக இருத்தல் வேண்டும் என்பதுடன், அது எந்த இடப்பரப்புக்கெனத் தாபிக்கப்பட்டதோ அந்த இடப்பரப்பின் கிராமோதய சபையின் பெயராலும் பதவிப் பெயராலும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளுவதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும்; அத்துடன், அப்பெயராலும் பதவிப்பெயராலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

(3ஆ) கிராமோதய சபையின் பொது இலச்சினை—

(அ) கிராமோதய சபையின் செயலாளரது கட்டுக்காப்பில் இருந்துவருதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அது, கிராமோதய சபையின் வலுவளிப்புடனன்றியும் கிராமோதய சபையின் தவிசாளரினதும் செயலாளரினதும் சமுகத்தில் தவிரவும் ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது வேறு சாதனத்தில் பொறிக்கப்படுதலுமாகாது; மேலும் அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அத்தாட்சியாக அத்தகைய ஒப்பந்தத்தில் அல்லது வேறு சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3இ) கிராமோதய சபை ஒவ்வொன்றும், எந்த இடப்பரப்புக்கென அத்தகைய கிராமோதய சபை தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பிற்குள், இச்சட்டத்தினல் அல்லது இச்சட்டத்

தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் அத்தகைய கிராமோதய சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அபிவிருத்திச் சபை ஒன்றினுல், அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழுவினுல் அல்லது மாவட்டச் செயலாளர் ஒருவரினுல் அத்தகைய கிராமோதய சபைக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் வேலையை நிறைவேற்றுதலும் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் :—

" (5அ) பிரதேச சபை ஒவ்வொன்றும் இடையரு வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக இருத்தல் வேண்டும் என்பதுடன், அது எந்த இடப்பரப்புக்கெனத் தாபிக்கப்பட்டதோ அந்த இடப்பரப்பின் பிரதேச சபையின் பெயராலும் பதவிப் பெயராலும் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயராலும் பதவிப்பெயராலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

(5ஆ) பிரதேச சபையின் பொது இலச்சினை—

(அ) பிரதேச சபையின் செயலாளரது கட்டுக்காப்பில் இருந்து வருதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அது, பிரதேச சபையின் வலுவளிப்புடனன்றியும் பிரதேச சபையின் தவிசாளரினதும் செயலாளரினதும் சமுகத்தில் தவிரவும் ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது வேறு சாதனத்தில் பொறிக்கப்படுதலும் ஆகாது ; மேலும் அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அத்தாட்சியாக அத்தகைய ஒப்பந்தத்தில் அல்லது வேறு சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(5இ) பிரதேச சபை ஒவ்வொன்றும் எந்த இடப்பரப்புக்கென அத்தகைய பிரதேச சபை தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பிற்குள், இச்சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் அத்தகைய பிரதேச சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அபிவிருத்திச் சபையொன்றினுல், அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழுவினுல் அல்லது மாவட்டச் செயலாளர் ஒருவரினுல் அத்தகைய பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் வேலையை நிறைவேற்றுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அதற்கிணங்க, அக்கட்டளைச் சட்டங்களிலுள்ள அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள ஏதேனும் பட்டின சபை பற்றிய அல்லது கிராம சபை பற்றிய குறிப்பீடெதுவும், ஓர் அபிவிருத்திச் சபை பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"அதற்கிணங்க, அக்கட்டளைச்சட்டங்களிலுள்ள அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள—

(i) ஏதேனும் பட்டினசபை பற்றிய அல்லது கிராமச்சபை பற்றிய குறிப்பீடெதுவும், ஓர் அபிவிருத்திச் சபை பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) பட்டின சபையொன்றின் எவரேனும் தவிசாளர் பற்றிய அல்லது கிராமச் சபையொன்றின் எவரேனும் தவிசாளர் பற்றிய குறிப்பீடெதுவும், அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழு பற்றிய அல்லது தீர்மானத்தின் மூலம் அத்தகைய நிறைவேற்றுக் குழுவால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;".

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவுக்கு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் செய்யப்பட்ட திருத்தம், முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1981, மே 28 ஆம் தேதிய 142/6 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, "இருவேறு அலுவலர்களாலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு ஓர் அலுவலராலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 36 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது 36 அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"நிறைவேற்றுக் குழு அதன் தத்துவங்கள் முதலியவற்றைக் கையளிக்கலாம்.

36 அ (1) அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக்குழு, அபிவிருத்திச் சபையின் அங்கீகாரத்துக்கமைய, தீர்மானமொன்றின் மூலம், இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் அத்தகைய நிறைவேற்றுக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை,

பணிகளை அல்லது கடமைகளை அத்தகைய அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழுவினது தீர்மானத்தின் மூலம் அபிவிருத்திச் சபையொன்றின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமை அத்தகைய அலுவலரால் பிரயோகிக்கப்படுதலானது, நிறைவேற்றப்படுதலானது அல்லது புரியப்படுதலானது தீர்மானத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்ததாகவிருத்தலும் அத்துடன் அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கத்துக்கு அல்லது நோக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் கையளிப்பானது, நிறைவேற்றுக்குழுவின் தீர்மானமொன்றின் மூலம் எந்நேரத்திலும் வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) அபிவிருத்திச் சபையொன்றின் நிறைவேற்றுக் குழுவினால் ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமை அத்தகைய அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கப்பட்டிருப்பினும் கூட, நிறைவேற்றுக் குழுவானது அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை, பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது 48அ என்னும் பிரிவு என்றுற்போன்று பயனுறுதலும் வேண்டும்:—

"மாவட்டச் செயலாளர் தமது தத்துவங்கள் முதலியவற்றைக் கையளிக்கலாம்.

48அ. (1) அபிவிருத்திச் சபையொன்றின் மாவட்டச் செயலாளர், அபிவிருத்திச் சபையினதும் அதன் நிறைவேற்றுக் குழுவினதும் அங்கீகாரத்துக்கமைவாக, எழுத்திலுள்ள பொதுவான அல்லது சிறப்பான கட்டளை மூலம் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமைகளுள் எதனையும் அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றன் மூலம் அபிவிருத்திச் சபையின் மாவட்டச் செயலாளரினால் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை அபிவிருத்திச்

சபையொன்றன் அலுவலர் எவரும் பிரயோகிப்பதானது, நிறைவேற்றுவதானது அல்லது புரிவதானது, அத்தகைய ஏதேனும் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்ததாகவிருத்தலும் அத்துடன் அவ்வாறு குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கத்துக்கு அல்லது நோக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய கையளிப்பு, மாவட்டச் செயலாளரின் கட்டளைமூலம் எந்நேரத்திலும் வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) அபிவிருத்திச் சபையொன்றின் மாவட்டச் செயலாளரினால் ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமை அத்தகைய அபிவிருத்திச் சபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கப்பட்டிருப்பினும்கூட, மாவட்டச் செயலாளரானவர் அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

7. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவானது அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(8) ஏதேனும் பட்டின சபைக்கு அல்லது கிராம சபைக்கு எவரேனும் ஆளிடமிருந்து போகுமதியாக இருக்கின்றதென எவரேனும் கணக்காய்வாளரினால் சான்றுபடுத்தப்பட்ட பணத்தொகை ஒவ்வொன்றும் அத்தகைய பட்டின சபை அல்லது கிராம சபை எந்த அபிவிருத்திச் சபைக்குள்ளாக அமைந்திருக்கின்றதோ அந்த அபிவிருத்திச் சபையின் மாவட்டச் செயலாளரினால் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள முறையில் அறவிடப்படுதல் வேண்டும்.".

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தமானது முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது கிராம சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் மிகுவிதிப்பனவு தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "ஐயாயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "ஐயாயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) "ஐயாயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் "ஐயாயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 75அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது 75அ என்னும் பிரிவு என்றூற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"வரிகள் தவிர்ந்த வேறு பணத்தொகைகளின் கொடுப்பனவு விலக்கல்.

75அ. எவரேனும் ஆளிடமிருந்து சபைக்கு வருமதியாகவுள்ள (75 ஆம் பிரிவினால் அதன் வரிவிலக்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதான தொகையொன்று அல்லாத) ஏதேனும் பணத்தொகை கணிசமானதாக இல்லையென அல்லது அறவிடப்படற்பாலதன்றென அல்லது அதற்கு ஆளானவரான ஆளின் ஏழ்மை காரணமாக அது பதிவழிக்கப்படவேண்டியது என அபிவிருத்திச் சபையொன்றுக்குத் தோன்றுமாயின், அவ்வபிவிருத்திச் சபை, தீர்மானத்தின்மூலம் அப்பணத்தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கொடுப்பனவிலிருந்து விலக்கலாம்.".